# பத்திரிக்கை செய்தி

அரசு பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர்கள் காலிபணியிடங்களுக்கு பணித்தெரிவு சார்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கை எண் 14/2019 நாள் 27.11.2019 அன்று வெளியிடப்பட்டது. இணையவழி வாயிலாக விண்ணப்பத்தினை விண்ணப்பத்தாரர்கள் 22.01.2020 முதல் பதிவேற்றம் செய்திடலாம் என தெரிவிக்கப்பட்டது. மேலும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்ய 12.02.2020 மாலை 5.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. அதில் கணினி வழி தேர்வுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது அக்டோபர் மாதம் 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் தேர்வுகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தேர்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இத்தேதிகள் பெருந் தொற்று சூழ்நிலை, தேர்வு மையங்களின் தயார் நிலை (Availability of Examination Centre) மற்றும் நிர்வாக வசதியினை பொறுத்து மாறுதலுக்கு உட்பட்டது எனவும் அறிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர் தேர்வு வாரியம்